RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING — மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





சிவகங்கை | மலர்-4 | இதழ்- 307 | நவம்பர்.7 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## தமிழக அரசியலில் சில வாரங்களில் பெரிய மாற்றம் அன்புமணி நம்பிக்கை

சென்னை, நவ.07-

தமிழக அரசியலில் அடுத்த சில வாரங்களில் பெரிய மாற்றங்கள் ஏற்பட உள்ளதாக பாமக தலைவர் அன்புமணி தருமபுரியில் தெரிவித்தார். தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் வட்டம் ஈச்சம்பாடி பகுதியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஈச்சம்பாடி அணையில் இருந்து உபரிநீர் நீரேற்றும் திட்டத்தை செயல் படுத்த வலியுறுத்தி பாமக தலைவர் அன்புமணி தலைமையில் நேற்று ஈச்சம்பாடி அணை பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.



ஆர்ப்பாட்டத்தின்போது, 'விவசாயிகளுக்கு பயனளிக்கும் எந்த திட்டத்தையும் திமுக அரசு செயல்படுத்தவில்லை. மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் நீர்ப்பாசன திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் உபரி நீர் திட்டம் உள்ளிட்ட பாசன திட்டங்கள் அனைத்தும் நிறை வேற்றப்படவில்லை' என அன்புமணி பேசினார்.

ஆர்ப்பாட்ட முடிவில் அவர் செய்தியாளர்களிடம் கூறியது: இன்றுடன் பாமகவின் உரிமை மீட்பு பயணம் 100வது நாளை நிறைவு செய்கிறது. அதையொட்டி, ஈச்சம்பாடி அணைக்கட்டு உபரி நீரை நீரேற்றம் செய்து 60 ஏரிகளுக்கு நிரப்பும் திட்டம் கோரி விவசாயிகளுடன் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளோம். இந்த திட்டம், கூடுதலாக 8,000 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி வழங்கும்.

தமிழகத்துக்கு ரூ.11 லட்சத்து 32 ஆயிரம் கோடி முதலீடு ஈர்க்கப்பட்டு 34 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என முதல்வர் கூறும் தகவல்கள் அனைத்தும் பொய். தற்போதுவரை தமிழகத்துக்கு ரூ.1 லட்சம் கோடிக்கு கூட முதலீடுகள் ஈர்க்கப்படவில்லை. இந்த உண்மைகளை தெரியப்படுத்தும் வகையில் பாமக சார்பில் தயாராகி வரும் புத்தகம் விரைவில் வெளியிடப்பட இருக்கிறது. அண்மையில் கோவையில் நடந்த பாலியல் வன்கொடுமை சம்பவத்துக்கு குடிபோதை தான் முக்கிய காரணம்.


இந்தியாவிலேயே போதை பொருள் பயன்பாட்டில் பஞ்சாப் மாநிலம் முதலிடத்திலும், பின்னர் கேரள மாநிலம் முதலிடத்திலும் இருந்தது. தற்போது தமிழ்நாடு போதைப்பொருள் புழக்கத்தில் முதலிடத்தில் உள்ளது. அமெரிக்காவில் கிடைக்கக்கூடிய அனைத்து போதை பொருட்களும் தமிழகத்தில் கிடைக்கிறது.

தேர்தலின்போது பணத்தை கொடுத்து வாக்காளர்களை விலைக்கு வாங்கி வெற்றிபெறலாம் என கணக்குபோடும் திமுகவுக்கு தகுந்த பாடம் புகட்டுவோம். எப்படியும் வெற்றி பெற்றுவிடலாம் என்ற திமுகவின் எண்ணம் நிறைவேறாது. தமிழக அரசியலில் சில வாரங்களில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்படும். 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக தோற்கடிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## ராணுவத்துக்கு மதம், ஜாதி கிடையாது: ராகுல் கருத்துக்கு அமைச்சர் ராஜ்நாத் சிங் பதில்

புதுடெல்லி, நவ.07-

ராணுவத்துக்கு மதம், ஜாதி ஆகியவை கிடையாது என ராகுல் கருத்துக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பதில் அளித்துள்ளார்.



பிஹார் மாநிலம் அவுரங்காபாத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் மக்களவை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பங்கேற்று பேசினார். அப்போது அவர் கூறுகையில், '' நாட்டில் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் 10 சதவீதம் பேர் உள்ளனர்.

இவர்கள் கட்டுப்பாட்டில்தான் கார்பரேட் நிறுவனங்கள், அரசு நிர்வாகம், நீதித்துறை, ராணுவமும் கூட இந்த 10 சதவீதத்தினர் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. மீதம் உள்ள 90 சதவீதம் பேர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், எஸ்.சி, எஸ்டி பிரிவினர் மற்றும் இதர சிறுபான்மையினர்.

அதனால்தான் நாங்கள் சமூக நீதி, சம வாய்ப்புக்கு தேசியளவில் ஜாதி ரீதியான மக்கள் தொகை கணக்கெடுப்பு தேவை என கோரிக்கை விடுக்கிறோம்'' என்றார்.

ராகுலின் இந்த கருத்துக்கு பதில் அளித்துள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியதாவது: ராணுவத்திலும் இட ஒதுக்கீடு முறையை கொண்டுவந்து ஒழுங்கற்ற தன்மையை ஏற்படுத்த ராகுல் காந்தி முயற்சிக்கிறார். அவர் ராணுவத்தை அரசியலுக்குள் இழுக்க முயற்சிக்கிறார்.

இட ஒதுக்கீடு இருக்க வேண்டும். பாஜக.,வும் இடஒதுக்கீட்டுக்கு ஆதரவானதுதான். ஏழைகளுக்கு நாங்கள் இட ஒதுக்கீடு வழங்கியுள்ளோம். ஆனால் நமது ராணுவ வீரர்களுக்கு ஒரே ஒரு மதம்தான்.

ராணுவ நடத்தை விதி முறைதான் அவர்களின் மதம். நாடு நெருக்கடியை சந்திக்கும்போதெல்லாம் நமது வீரர்கள் தங்களின் வீரம் மூலம் நாட்டை தலை நிமிரச் செய்துள்ளனர். ஜாதி, மத ரீதியிலான அரசியல் நாட்டுக்கு தீங்கை ஏற்படுத்தியுள்ளது. அனைத்து தரப்பினரும் முன்னேற வேண்டும் என்பதுதான் நமது எண்ணம். பாகுபாட்டை ஏற்படுத்த நாங்கள் விரும்பவில்லை. இவ்வாறு ராஜ்நாத் சிங் கூறினார்.

## அதிமுக நிர்வாகிகள் என்னுடன் தொடர்பில் உள்ளனர்: செங்கோட்டையன் தகவல்

கோவை, நவ.07-

அதிமுக நிர்வாகிகள் என்னுடன் தொடர்பில் உள்ளனர். அவர்களது பெயர்களை வெளிப்படுத்தினால் பாதிக்கப்படுவார்கள் என்று முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கூறினார்.



கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: இரட்டை இலை சின்னம் ஒதுக்கீடு தொடர்பாக நிலுவையில் உள்ள மனு மீது விசாரணை நடத்த வேண்டும் என்று தேர்தல் ஆணையத்துக்கு 250 பக்க கடிதம் அனுப்பியுள்ளேன். அதில் பல முக்கிய விஷயங்கள் உள்ளன. தேர்தல் ஆணைய விதிகளின் படி அவற்றை வெளியில் சொல்ல முடியாது. அடுத்தகட்ட நடவடிக்கையை பொறுத்திருந்துப் பாருங்கள். நல்லதே நடக்கும்.

அதிமுக கட்சி விவகாரங்களில் பழனிசாமியின் மகன், மைத்துனர், மருமகன் ஆகியோர் தலையிடுகின்றனர். அவர்கள் தொகுதி வாரியாக சென்று கொண்டிருக்கின்றனர். அவர்களது செயல்பாடுகள் மூத்த நிர்வாகிகளுக்கு இடையூறாக உள்ளன.

அதிமுக நிர்வாகிகள் என்னுடன் தொடர்பில் உள்ளனர். என்னுடன் யார், யார் பேசுகின்றனர் என்பது அவர்களுக்கும், எனக்கும் மட்டும்தான் தெரியும். அதை வெளிப்படுத்தினால், அவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

நான் கடந்த 53 ஆண்டுகளாக கட்சியில் இருக்கிறேன். என்னை தனிப்பட்ட முறையில் யாரும் இயக்க முடியாது. மூத்த நிர்வாகியான என்னை அதிமுகவில் இருந்து நீக்கியது ஏன் என்று பழனிசாமியிடம் தான் கேட்க வேண்டும். மனோஜ் பாண்டியன் திமுகவில் இணைந்தது அவரது விருப்பம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## 'பிஹாரில் தே.ஜ.கூட்டணிக்கு முன்னெப்போதும் இல்லாத பெரும்பான்மை கிடைக்கும்

புதுடெல்லி: நவ.7-

பிஹார் சட்டப்பேரவை தேர்தலில் முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெற்று வரும் நிலையில், 'வாக்காளர்களிடையே காணப்படும் உற்சாகம், தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு முன்னெப்போதும் இல்லாத பெரும்பான்மை கிடைக்கும் என்பதைக் குறிக்கிறது' என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.



பிஹார் சட்டப்பேரவை தேர்தலின் இரண்டாம் கட்டத்திற்கான தேர்தல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக பிரதமர் மோடி இன்று இரண்டு பேரணிகளில் உரையாற்ற உள்ளார். அராரியா மாவட்டத்தின் ஃபோர்ப்ஸ்கஞ்சில் நடைபெறும் பொதுக் கூட்டம் மற்றும் பகல்பூரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அவர் உரையாற்றுகிறார்.

இதுகுறித்து அவர் இன்று வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'பிஹாரில் நடைபெறும் ஜனநாயகத்தின் மாபெரும் திருவிழா மக்களிடையே அற்புதமான உற்சாகத்தைக் காண்கிறது. இது சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு முன்னெப்போதும் இல்லாத பெரும்பான்மை கிடைக்கும் என்பதைக் குறிக்கிறது. இந்த உற்சாகமான சூழ்நிலையில், அராரியாவின் ஃபோர்ப்ஸ்கஞ்சில் காலை 11:30 மணியளவில் மற்றும் பகல்பூரில் பிற்பகல் 1:30 மணியளவில் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் எனது குடும்ப உறுப்பினர்களின் ஆசீர்வாதங்களைப் பெற ஆவலாக உள்ளேன்' என்று தெரிவித்தார்.

பிஹார் சட்டப்பேரவையில் மொத்தம் உள்ள 243ல் 121 தொகுதிகளில் நேற்று முதல்கட்ட தேர்தல் நடைபெற்றது. 18 மாவட்டங்களை உள்ளடக்கிய இந்த தொகுதிகளில் மொத்தம் 122 பெண்கள் உள்ளிட்ட 1,314 வேட்பாளர்கள் போட்டியில் உள்ளனர். வாக்காளர்கள் எண்ணிக்கை 3.75 கோடி. மொத்தம் 45,341 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன

## தேர்தல் கூட்டணியை நான் பார்த்துக் கொள்கிறேன்: அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் பழனிசாமி உறுதி

சென்னை, நவ.07-

தேர்தல் கூட்டணியை நான் பார்த்துக் கொள்கிறேன், நீங்கள் கட்சி வளர்ச்சிப் பணிகளை கவனியுங்கள் என்று அதிமுக மாவட்டச் செயலாளர்களுடனான ஆலோசனை கூட்டத்தில் பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார். இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியை கடந்த நவ.4ம் தேதி தொடங்கியது. இதற்கு திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.



அதே நேரத்தில் அதிமுக மற்றும் பாஜக ஆகிய கட்சிகள் ஆதரித்து வருகின்றன. ஏற்கெனவே வாக்காளர் பட்டியலில் அதிக அளவில் போலி வாக்காளரை திமுக அரசு சேர்த்து இருப்பதாக அதிமுக குற்றஞ்சாட்டி வருகிறது. இந்நிலையில், அதிமுக மாவட்ட செயலாளர்கள் ஆலோசனை கூட்டம், சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில், பொதுச் செயலாளர் பழனிசாமி தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில், வாக்குச்சாவடி கிளை அளவில் நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் அனைவரையும் ஆன்லைனில் ஒருங்கிணைப்பது உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருவது குறித்த விவரங்களை கேட்டறிந்தார். பின்னர் கூட்டத்தில் பேசும்போது, எஸ்ஐஆர் பணி மிகவும் முக்கியமான பணி. வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகளை சரி செய்வதற்கு இது சரியான தருணம். அதனால் இதில் மாவட்ட செயலாளர்கள் அனைவரும் தனிக்கவனம் செலுத்தி, சரியான வாக்காளர் பட்டியல் தயார் செய்வதற்கு தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.


அதிமுக வாக்களிக்கக் கூடியவர்களின் பெயர்களை, வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க திட்டமிட்டால் அதை தீவிரமாக கண்காணித்து தடுக்க வேண்டும். ஒன்றிய அளவில் வழக்கறிஞர் அணியினரை நியமிக்க வேண்டும். ஒன்றிய அளவில் எஸ்ஐஆர் பணியில் ஆளுங்கட்சியினரின் தலையீடுகள், முறைகேடுகள் ஏதேனும் இருந்தால், உடனடியாக மாவட்ட தேர்தல் அதிகாரிகளிடம் புகார் தெரிவிக்க வேண்டும். எஸ்ஐஆர் பணியை ஆளுங்கட்சியினரே கையிலெடுத்துக்கொள்ளும் செயல்கள் எங்கேனும் நடைபெற்றால் உடனடியாக தடுத்துநிறுத்த வேண்டும்.

இந்த பணியில் அதிமுக சார்பில் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் நிர்வாகிகளை, எஸ்ஐஆர் பணியில் முழுமையாக ஈடுபடுத்த வேண்டும். இப்பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள அரசு அலுவலர்களின் பணிகளையும் தீவிரமாக கண்காணிக்க வேண்டும்.

தமிழகத்தில் 2026 சட்டப்பேரவை தேர்தல் கூட்டணியை நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் கட்சி வளர்ச்சி பணிகளை தீவிரமாக மேற்கொள்ளுங்கள். உள்ளாட்சிகள் அளவிலான மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக அதிக அளவில் ஆர்ப்பாட்டங்களை நடத்துங்கள்.

திமுக அரசின் அவலங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும். குறிப்பாக பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதை எடுத்துச்சொல்லுங்கள். இவ்வாறு அவர் பேசினார். இக்கூட்டத்தில் பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன், துணைப்பொதுச் செயலாளர்கள் நத்தம் விஸ்வநாதன், கே.பி.முனுசாமி, தலைமை நிலைய செயலாளர் எஸ்.பி.வேலுமணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ரூ.127.57 கோடி செலவில் 5,322 பள்ளிகளில் 6,672 ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்க டெண்டர் கோரியது தமிழ்நாடு அரசு



சென்னை, நவ.07-


ரூ.127.57 கோடி செலவில் 5,322 பள்ளிகளில் 6,672 ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்க தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது. தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்தது முதலே அரசு பள்ளிகளில் பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அதன்படி ரூ.159 கோடியில் 2,232 அரசு பள்ளிகளில் 2,236 ஆய்வகங்கள் அமைக்கவும் தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் 2026-27க்குள் 6,672 ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கப்படும் என பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 37,626 அரசு பள்ளிகளில் 30,774 பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள், ஆய்வகங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## 2026க்கான டிஎன்பிஎஸ்சி தேர்வு அட்டவணை விரைவில் வெளியாகும் என தேர்வாணைய தலைவர் தகவல்

சென்னை, நவ.07-

டிஎன்பிஎஸ்சி 2026ம் ஆண்டுக்கான தேர்வு அட்டவணை விரைவில் வெளியிடப்படும் என்று அதன் தலைவர் எஸ்.கே.பிரபாகர் தெரிவித்தார்.



தமிழக அரசின் பல்வேறு துறைகளுக்கான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் டிஎன்பிஎஸ்சி வாயிலாக தேர்வு செய்யப் படுகின்றனர். இதன்படி 2026க்கான போட்டித் தேர்வு அட்டவணை விரைவில் வெளியாகவுள்ளது.

இதுதொடர்பாக டிஎன்பிஎஸ்சி தலைவர் எஸ்.கே. பிரபாகர் கூறியதாவது: குருப்4 தேர்வில் வெவ்வேறு அரசு துறைகளிடமிருந்து காலிப்பணியிடங்கள் வந்த வண்ணம் உள்ளதால் காலிப்பணியிடங்கள் மேலும் அதிகரிக்கும். அதே போல், ஒருங்கிணைந்த குரூப்2 மற்றும் குரூப்2ஏ தேர்விலும் காலிப்பணியிட எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

முந்தைய ஆண்டு தேர்வுகளின்போது இரண்டு அல்லது 3 ஆண்டுகளுக்குரிய காலிப்பணியிடங்கள் சேர்த்து நிரப்பப்பட்டதால் காலியிடங்களின் எண்ணிக்கை அதிகம் இருப்பதுபோல் தோன்றியிருக்கும். தற்போது அந்தந்த ஆண்டுக்குரிய காலியிடங்கள் அதே ஆண்டில் நிரப்பப்படுவதால் காலியிடங்கள் குறைவாக இருப்பது போல் தெரியலாம்.

மாநில அரசு பல்கலைக்கழகங்களில் உள்ள ஆசிரியர் அல்லாத பணியிடங்களையும் டிஎன்பிஎஸ்சி வாயிலாக நிரப்ப அரசு முடிவுசெய்துள்ளது. இதற்கான கல்வித்தகுதிக்கு ஏற்ப அவை குரூப் 4,2 தேர்வு மூலமாகவே நிரப்பப்படும்.

2026ம் ஆண்டுக்கான வருடாந்திர தேர்வு அட்டவணை தயாரிக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. அதில் குரூப்1, குரூப் 2 மற்றும் 2ஏ, குரூப்4 தேர்வுகள் உள்பட பல்வேறு தேர்வுகளுக்கான அறிவிப்புகளுடன் விரைவில் வெளியிடப்படும்.



# சிவகங்கை வடக்கு ஒன்றியக்கழக திமுக செயற்குழு கூட்டம்

சிவகங்கை, நவ.07-
சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக செயற்குழு கூட்டமானது அவைத்தலைவர் காவேரி மணியம் தலைமையிலும் மாவட்ட திமுக மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்களான எஸ். எம்.மதிவாணன், கிங் கார்த்திக், ஒன்றியக்கழக நிர்வாகிகளான துணைச் செயலாளர் வில்லிபட்டி பண்ணையார் ஆ. இராமமூர்த்தி, பொருளாளர் தொமுச இபி முருகேசன், மாவட்ட பிரதிநிதிகள் ஒக்கூர் சோமசுந்தரம், சோழபுரம் மாரி, மாவட்ட ஐடி விங் துணை ஒருங்கிணைப்பாளர் வாடிவாசல் முத்துவேல் செல்வம், திருமலை குமணன், மாவட்ட தொழி லாளரணி துணை அமைப்பாளர் புதுப்பட்டி பா. அரச்சுணன் ஆகியோரது முன்னிலையிலும் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் ஒன்றிய திமுக செயலாளர் திருமலை ஆ. முத்துராமலிங்கம், பாக முகவர்களது களப்பணி குறித்தும் துணை முதலமைச்சரின் பிறந்தநாள் விழாவினை சிறப்பாகக் கொண்டாடுவது பற்றியும் , எஸ்ஐஆர். பற்றியும் பாக முகவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் ஒன்றிய நிர்வாகிகளான ஒன்றிய ஐடி விங் தமறாக்கி அம்பலம், வேல்முருகன், திருமலை மணிமாறன், ஒன்றிய வர்த்தக அணி ஹனீபா, சத்தியவான், காஞ்சிரங்கால் கண்டக்டர் ஏழுமலை, பாடகர் ஈசனூர் பாலுச்சாமி, அம்மச்சிபட்டி நாகமுத்து, அழகமாநகரி கண்ண தாசன், இளைஞரணி காடமுத்தான்பட்டி சுரேஷ்குமார் , மோகன், கௌதம், கரண் , முத்து உள்ளிட்ட திமுக வினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.






# சேம்பார் நடுநிலைப் பள்ளியில் ஓவிய பயிற்சி

காளையார் கோவில், நவ.07
சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மூன்று முதல் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு ஓவியம் வரைவதற்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. பயிற்சி முகாமை பொறுப்பு தலைமை ஆசிரியர் சுரேஷ் தொடங்கி வைத்தார். ஓவிய பயிற்சி ஆசிரியர் ரமேஷ் ஓவியம் எப்படி வரைய வேண்டும் என்பதை மிகத் தெளிவாக எடுத்து கூறி மாணவர்களுக்கு வரைந்து பயிற்சி அளித்தார். மேலும் இந்நிகழ்வில் ஆர்ட் அண்ட் கிராப்ட் பயிற்சி, மாணவர்களுக்கு ஒரிகோமி வண்ணத் தாள்களை பயன்படுத்தி மாதிரிகள் செய்து பயிற்சி அளித்தார். மேலும் பழைய செய்தித்தாள்களை பயன்படுத்தி பிளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக காகித பைகள் எவ்வாறு செய்வது என்பதை பற்றி மிகத் தெளிவாக செய்து காட்டி விளக்கினார். மாணவர்கள் ஆர்வத்துடன் கற்றுக் கொண்டனர். இந்நிகழ்வில் ஆசிரியர்கள் காளீஸ்வரன், முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, பாரதி மலர், தனபாக்கியம் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மாணவர்கள் கெவின் ரியாசன், ஜோஸ்வா, தில்சன், சாம் விக்டர், ஜஸ்மிதா, நித்யஸ்ரீ, திவ்யாஸ்ரீ, கனிஷ்கா, மரிய ரெக்சிலின் , டார்வின் தாவீது, முகேஷ், பால் ஹரிஷ், அருள் ஜோஸ்வின், லிடிஸ்டினா, ஆரோ ஆஜிதா, மகதி, பிரியதர்ஷினி,கார்த்திகா, அனன்யா,ரிஸ்வன், செர்வின் , பிரேம்குமார் ,கிஷோர், தர்ஷினி ஸ்ரீ ,அஸ்வதா , ஜேர்லின் ஜாய், ரெபினா ,கார்லினா விஜயதர்ஷினி , மற்றும் யுவன்சிகா ஆகிய மாணவர்கள் ஓவியப் பயிற்சி மற்றும் ஆர்ட் அண்ட் கிராப்ட் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

# தேசிய அளவிலான தடகளப் போட்டிக்கு தேவகோட்டை பள்ளி மாணவர் தேர்வு



தேவகோட்டை, நவ.07-
சிவகங்கை மாவட்டம் தேவகோட்டைதமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறை சார்பில் மாநில அளவிலான 66 ஆவது குடியரசு தின விழா விளையாட்டுப் போட்டிகள் நவம்பர் 1,2, 3 தேதிகளில் தஞ்சாவூரில் நடைபெற்றன தேவகோட்டை தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி மாணவர் தீஷ்வா உயரம் தாண்டுதல் போட்டியில் மாநில அளவில் வெள்ளிப் பதக்கம் பெற்றதோடு டிசம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் நடைபெற உள்ள தேசிய அளவிலான போட்டியில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளார்

வெள்ளிப் பதக்கம் வென்று சிவகங்கை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த சாதனை மாணவரையும், அவருக்குப் பயிற்சி அளித்த உடற்கல்வி இயக்குநர் பிரபாகர் உடற்கல்வி ஆசிரியர்கள் கிறிஸ்டோபர் ஜெயராஜ் சிவக்குமார் அருளானந்தம் ஆகியோரையும் பள்ளியின் அதிபர் பாபு வின்செண்ட் ராஜாதாளாளர் மற்றும்தலைமை ஆசிரியர்சேவியர் ராஜ்மாணவர் இல்ல இயக்குநர் விக்டர் டிசோசா முன்னாள் மாணவர் மன்ற இயக்குநர் எட்வர்ட் லெனின் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் பாராட்டினர்.



# சென்னை மாநகராட்சி14 மண்டலம் உள்ளடங்கிய வார்டுகளில் மழை நீர் வடிகால் மடிப்பாக்கம் மக்களின் கோரிக்கை ஏற்று எம் .எல். ஏ ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை

மடிப்பாக்கம். நவ.07-
சோழிங்கநல்லூர் தொகுதிக்குபட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ல் உள்ளடங்கிய வார்டு 188 வது மடிப்பாக்கம் பஜனை கோவில் தெரு, மன்னடி அம்மன் கோவில் தெரு, செங்கேணி அம்மன் கோவில் தெரு,கன்னியம்மன் கோவில் தெரு ஆகிய தெரு க்களில் பொது மக்களின் புகாரின் அடிப்படையில் 188 வது மாமன்ற உறுப்பினர்., மடிப்பா க்கம். சாமீனா செல்வம் கோரிக்கையை ஏற்று (05/11/2025 ) அன்று எம் .எல். ஏ., எஸ். அரவிந்த ரமேஷ் நேரில் சென்று அந்த பகுதியில் மழைநீர் வடிகால்வாய்யை தூர்வார வேண்டுமெனவும், மழைநீர் வடிக்கால்வாயில் தேங்கியிருந்த கழிவுகளை அகற்றப்பட வேண்டுமெனவும், மற்றும் ஆபத்தான முறையில் இருந்த மின்சார கேபிள்களையும் சரி செய்ய வேண்டும்.

மேலும் இந்த பகுதியில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள் உள்ளன.ஆனால் 1500 குடியிருப்புகளுக்கு மட்டும் பாதாள சாக்கடை இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளுக்கு உடனடியாக வீடு வீடாகச் சென்று இந்த திட்டத்தைப் பற்றி பொது மக்களுக்கு எடுத்துரைத்து இந்த திட்டத்தில் அவர்களை உடனடியாக இணைத்து பயன்பெற வேண்டுமென உடனிருந்த துறை சார்ந்த அரசு அதிகாரிகளிடம் வலியுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.


உடன் சென்னை மாநகராட்சி 188 வது மாமன்ற கழக நிர்வாகிகள் அனைவரும் உடனிருந்தனர்.





# தாம்பரம் அடுத்த அகரம் தென் ஊராட்சியில் ரூ.1 கோடி 18 லட்சம் மதிப்பீட்டில் எம். எல். ஏ.,பூமி பூஜையை மகிழ்ச்சியுடன் தொடங்கி வைத்தார்

அகரம், நவ.07-
செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட அகரம் தென் ஊராட்சியில் (நவம்பர் : 05) ஊராட்சி மன்ற தலைவர்., சி. கே .ஜெகதீஸ்வரன் ஏற்பாட்டில் எம்.எல்.ஏ., வுக்கு மேல தாளங்களுடன் வான வேடிக்கை பட்டாசு வெடித்து ஊராட்சி மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர் . ரூ.1 கோடி 18 லட்சம் மதிப்பீட்டில் நிதித்தொகையை பெற்று தந்த எஸ். ஆர் .ராஜா எம். எல். ஏ., வுக்கு அகரம் தென் ஊராட்சி மக்கள் பாராட்டி நன்றி தெரிவித்தனர் . தொடர்ந்து ஒரு பூமி பூஜையை பொதுக்கூட்டம் போல் ஏற்பாடு செய்திருந்த சி. கே. ஜெகதீஸ்வரன் ஊராட்சி மன்ற தலைவரை எம். எல் .ஏ. பாராட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. பொது மக்களின் குறைகளை கேட்டறிந்து தேவையான வசதியிடம், உதவிகளையும் செய்து கொடுப்பது மிக்க மகிழ்ச்சி அடைகிறேன் என்று எம் .எல். ஏ., தெரிவித்தார். தொடர்ந்து பொதுமக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர் உடனடியாக அதற்கான ஏற்பாடுகளை கூடியவிரைவில் செய்து தருகிறேன் என்று உறுதி அளித்தார். தொடர்ந்து ஊராட்சி மன்ற தலைவர் ,துணைத் தலைவர், ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் முன்பு பூமி பூஜையை சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர் ராஜா மகிழ்ச்சியுடன் தொடங்கி வைத்தார்.



# மகனின் முதல் சம்பளத்தை வாங்கிய பெற்றோர் மகிழ்ச்சி: சமூக ஊடகத்தில் வீடியோ வைரல்

புதுடெல்லி, நவ.07-
இளைஞர் ஒருவர் தனது முதல் சம்பளத்தை பெற்றோரிடம் கொடுத்த பிறகு அவர்களின் முகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியை படம் பிடித்து 'எக்ஸ்' தளத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். டெல்லி அருகே காஜியாபாத்தை சேர்ந்த ஆயுஷ்மான் சிங் என்ற அந்த இளைஞர் அந்த வீடியோவுக்கு 'முதல் சம்பளம், நேரடியாக பெற்றோருக்கு...' என்று தலைப்பிட்டுள்ளார்.

அந்த வீடியோ பதிவில், ஆயுஷ்மான் சிங் தனது தாயையும் தந்தையையும் ஒன்றாக உட்காரச் சொல்லி கண்களை மூடுமாறு கூறுகிறார். பிறகு தனது சம்பள கவரை அவர்கள் கைகளில் கொடுத்து கண்களை திறந்து பார்க்குமாறு கூறுகிறார். கவரில் ரூ.500 நோட்டுகளை பார்த்த அவரது தாய் 'வாவ்! என்ன இது..' என்று மிகவும் ஆச்சரியப்படுகிறார். இதற்கு, 'எனது முதல் சம்பளம்' என ஆயுஷ்மான் பதில் அளிக்கிறார்.

'வாவ்! அற்புதம்.. அருமை.. நிறைய பணம் உள்ளதே..' என்று அவரது தாய் மீண்டும் வியப்பு தெரிவிக்கிறார். அப்போது தாய், தந்தையின் உணர்ச்சிப் பெருக்கு நம்மை நெகிழ்ச்சி அடையச் செய்கிறது. இந்த வீடியோ ஆன்லைனில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. ''இந்த செயலியில் நான் பார்த்ததில் மிகவும் ஆரோக்கியமான விஷயம் இதுவாகத்தான் இருக்கும்'' என்று ஒரு பயனர் கூறினார்.

மற்றொரு பயனர், ''நீங்கள் வாங்கும் பொருளின் விலையோ அல்லது நீங்கள் அவர்களுக்குக் கொடுக்கும் பணத்தின் அளவோ முக்கியமல்ல. உங்கள் சம்பளத்தில் ஒரு பகுதியை நீங்கள் அவர்களுக்குக் கொடுக்கும்போது அவர்களின் கண்களில் ஏற்படும் பெருமை தான் முக்கியம்'' என்று குறிப்பிட்டுள்ளார்.



# கூடலூர் நகராட்சியில் 11வது முறையாக "உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம்"

கோவை, நவ .07-
கோவை மாவட்டம், கூடலூர் நகராட்சியில் 11வது முறையாக "உங்களுடன் ஸ்டாலின் முகாம்" 26 மற்றும் 27 வார்டு பொது மக்களுக்கான குறைதீர்க்கும் முகாம் நகர மன்ற தலைவர் அ.அறிவரசு தலைமையில் நகராட்சி ஆணையர் பூவேந்திரன் வரவேற்பில் நடைபெற்றது. இந்த முகாமில் சிறப்பு அழைப்பாளர்களாக ஸ்ரீ ராமகிருஷ்ணா வித்யாலயா செயலர் கரஸ்டானந்தர் சுவாமி, மேட்டுப்பாளையம் முன்னாள் எம்.எல்.ஏ., பா அருண்குமார், சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அதிகாரி சாந்த சீலா ஆகியோர் பொதுமக்களிடம் விண்ணப்ப மனுக்களை பெற்று முகாமை துவக்கி வைத்து சிறப்பித் தார்கள். இம்முகாமில் கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கலந்து கொண்டு நேரில் பார்வையிட்டு அங்குள்ள அரசு அதிகாரிகளிடம் மனுக்கள் மீது விரைவில் தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தினார். முகாமில் பல்வேறு அரசு துறை அதிகாரிகள், திமுக நிர்வாகிகள் காரமடை நகரக் கழகச் செயலாளர் இரா. வெங்கடேஷ், சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் குணசேகரன், வார்டு கவுன்சிலர்கள் உள்ளிட்ட மேலும் பலர் கலந்து கொண்டனர்.






# பம்மல் வடக்கு தெற்கு பகுதிகள், பொழிச்சலூர், திரிசூலம் ஊராட்சிகள் செயல் வீரர்கள் கூட்டம்

பம்மல், நவ.07-
காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பம்மல் வடக்கு தெற்கு பகுதிகள், பொழிச்சலூர், திரிசூலம் ஊராட்சிகள் செயல் வீரர்கள் கூட்டம் பம்மல் எஸ். எஸ் மகாலில் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத்தலைவர் வே.கருணாநிதி அவர்கள் தலைமையில் பம்மல் வடக்கு பகுதி கழக செயலாளர் த.ஜெயகுமார் மற்றும் புனித தோமையார் மலை ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி அவர்கள் வரவேற்புரையில் பகுதிகள் கழக நிர்வாகிகள், ஊராட்சிகள் கழக நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். மேலும் இக்கூட்டத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், தொ.மு.ச.பேரவை செயலாளர் இரா.பொன்ராம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் வட்டக் கழக செயலாளர்கள், கிளைக் கழகச் செயலா ளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஙிலிகி 2 , ஙிஞிகி , கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திருவண்ணாமலைக்கு செல்ல முடியவில்லையா? அந்த பலனை இந்த கோவிலில் பெறலாம்



வாழ்நாளில் ஒருமுறையாவது அவசியம் செல்ல வேண்டிய கோவில்களில் திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவில் மிக முக்கியமானதாகும். ஆனால் திருவண்ணாமலை சென்று வழிபட முடியாதவர்கள் அதற்கு நிகரானதாக கருதப்படும் மற்றொரு கோவிலுக்கு சென்று வழிபடலாம். இதனால் திருவண்ணாமலை சென்று வழிபட்ட பலனை பெற முடியும்.

பஞ்சபூத தலங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகவும், புகழ்பெற்றதுமாக கருதப்படுவது திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவில். நினைத்தாலே முக்தியை தரும் அற்புத தலமாக இது கருதப்படுகிறது. சித்தர்களின் பூமியாகவும், ஆன்மிக பூமியாகவும் கருதப்படும் திருவண்ணாமலைக்கு சென்று வழிபடுவதும், கிரிவலம் வருவதும் மிகப் பெரிய புண்ணிய பலனை தரும் என சொல்லப்படுகிறது. ஆனால் அனைவராலும் திருவண்ணாமலை தலத்திற்கு சென்று வழிபட முடியாது. அதே சமயம் திருவண்ணாமலை சென்று வழிபட்ட அதே புண்ணியத்தையும், பலனை தரும் மற்றொரு சிவ ஸ்தலம் தமிழகத்தில் உள்ளது.

திருவண்ணாமலை சென்று வழிபட்டாலும், கிரிவலம் வந்தாலும் என்னென்ன பலன்கள் கிடைக்குமோ அதே பலன் இந்த தலத்தில் சென்று வழிபட்டாலும் கிடைக்கும் என சொல்லப்படுகிறது. பல அற்புதங்களையும், சிறப்புக்களையும் கொண்ட இந்த கோவில் எங்குள்ளது, இதன் சிறப்புகள் என்னென்ன என்பதை தெரிந்து கொள்ளலாம்.

நாகப்பட்டினம் மாவட்டம் அந்தணப்பேட்டை பகுதியில் அமைந்துள்ள உண்ணாமுலை அம்பாள் உடனுறை அண்ணாமலை நாதர் திருக்கோயில் தான் அந்த சிறப்பு மிக்க கோவில். இது திருவண்ணாமலைக்கு நிகரான தலமாக கருதப்படுகிறது. திருவண்ணாமலைக்கு செல்ல இயலாதவர்கள் இத்திருக்கோயிலில் சென்று வழிபடலாம். இக்கோயிலில் அம்பாள் பிரசவம் பார்த்ததாக ஐதீகம். இக்கோயிலின் திருத்தேர் விசேஷ வடிவமைப்புடன், இந்து மத தெய்வங்கள் மற்றும் வழிபாட்டு முறைகள் மர சிற்பங்களால் கலை நயத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது தனிச்சிறப்பு.

மூன்று மாட அமைப்பு ராஜகோபுரம் கொண்ட இக்கோயில் கிழக்கு நோக்கி அமையப் பெற்றுள்ளது. சுவாமிக்கு இடது புறத்தில் உண்ணாமுலை அம்பாள் சன்னதி உள்ளது. சுவாமிக்கு எதிரில் கொடிமரம், வலது புறமாக வந்தால் கன்னி மூலையில் கணபதி, மேல்புறத்தில் தெட்சிணாமூர்த்தி தனி சன்னதியில் அருள்பாலிக்கின்றனர். சுற்று பிரகாரத்தில் விநாயகர், காசி விஸ்வநாதர், அருணாசலேஸ்வரர், ஜுரநாதர், நவக்கிரகங்கள், பஞ்சமூர்த்தி சன்னதி, வள்ளி தெய்வானையுடன் சுப்பிரமணியர், கெஜலெட்சுமி, வடக்கில் சனிபகவான், பைரவர் தனி தனி சன்னதியில் அருள்பாலித்து வருகின்றனர்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த இக்கோவில் சோழர் காலத்தில் கட்டப்பட்டதாக சொல்லப்படுகிறது. இத்திருக்கோயிலின் வடபுறம் மகா மண்டபத்தில் அமையப் பெற்ற ஜுரநாதருக்கு ரச சாதம் படைத்து தங்களது நேர்த்திக் கடனை பக்தர்கள் செலுத்துகின்றனர். சுக பிரசவம் ஏற்படவும், நாள் பட்ட காய்ச்சல் போகவும், குழந்தைப் பேறு கிடைக்கவும் பக்தர்கள் இங்குள்ள இறைவனை மனதார பிரார்த்தனை செய்கின்றனர்.குழந்தை வரம் பெற இக்கோவிலில் பலரும் வந்து வழிபட்டு செல்கின்றனர். இது முக்தியை தரும் தலமாகவும் கருதப்படுகிறது. நாகப்பட்டினம்பட்டுக்கோட்டை சாலையில், புத்தூர் அண்ணா சிலை அருகே இறங்கி ஒரு கி.மீ.,நடந்து செல்லும் தூரத்தில் கோயில் அமைந்துள்ளது.

## குழந்தை வரம் வேண்டுபவர்கள் செல்ல வேண்டிய 5 சக்தி வாய்ந்த கோவில்கள்

திருமணமான பலரும் இன்று அதிகம் எதிர்கொள்ளும் பிரச்சனை அவர்களுக்கு என குழந்தை இல்லாதது தான். பலருக்கும் குழந்தை பாக்கியம் கிடைப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. இதனால் ஏராளமாக பணம் செலவு செய்து சிகிச்சை பெற்றும் எதிர்பார்த்த பலன் கிடைக்காமல் போகிறது பலருக்கும். குழந்தை பாக்கியத்திற்காக காத்திருப்பவர்கள், சிகிச்சைகள் பலன் அளிக்கவில்லை என்ற நிலையில் இருப்பவர்கள் இந்த கோவில்களுக்கு செல்லலாம். தெய்வ அருள் இருந்தால் நடக்காததும் நடக்கும் அதிசயம் நிகழும் என்பார்கள். அப்படி டாக்டர்கள் கைவிட்ட பலருக்கும் குழந்தை பாக்கியத்தை அளித்து, அதிசயிக்க வைத்த மிக முக்கியமான 5 சக்தி வாய்ந்த கோவில்கள் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

குழந்தை வரம் பெற செல்ல வேண்டிய கோவில்கள்:

குழந்தை வரம் வேண்டி பல ஆண்டுகளாக காத்திருப்பவர்கள் தென்னிந்தியாவில் உள்ள குறிப்பிட்ட 5 கோவில்களுக்கு சென்று வந்தால் நிச்சயம் அவர்கள் வாழ்வில் அதிசயம் நடப்பது காண முடியும். இந்த 5 கோவில்களுக்கும் சென்று வழிபட முடியாவிட்டாலும், எந்தெந்த கோவில்களுக்கு செல்ல முடிகிறதோ அவற்றிற்கு சென்று மனமுருகி வேண்டினால், நிச்சயம் அடுத்த ஆண்டிற்குள் குழந்தை வரம் கிடைக்கும். அப்படிப்பட்ட சக்தி வாய்ந்த கோவில்கள் தான் இவை. இந்த ஐந்து கோவில்களுமே ஒவ்வொரு விதத்தில் சிறப்பு பெற்றதாகும். இங்கு சென்று வழிபட்டாலும், அங்கு குழந்தை பாக்கியத்திற்காக காலம் காலமாக செய்யப்பட்டு வரும் பரிகாரங்களை செய்வதாலும் நிச்சயம் கை மேல் பலன் கிடைக்கும்.

குழந்தை பாக்கியம் தரும் 5 கோவில்கள் :

1. கர்ப்பரட்சாம்பிகை அம்மன் கோவில் :

குழந்தை இல்லாதவர்கள், கருவில் குழந்தை தங்காதவர்கள், சுகப்பிரசவம் ஆக வேண்டும் என்கிறவர்கள் தமிழகத்தின் தஞ்சாவூர் மாவட்டத்தில் திருக்கருகாவூரில் அமைந்துள்ள கர்ப்பரட்சாம்பிகை கோவிலுக்கு சென்று வழிபடலாம். குழந்தை இல்லாதவர்கள் இங்கு பிரசாதமாக தரப்படும் நெய்யை வாங்கி, தொடர்ந்து 40 நாட்கள் சாப்பிட்டு வந்தால், விரைவில் அந்த தம்பதிக்கு குழந்தை வரம் கிடைக்கும்.

2. குக்கே சுப்ரமணியர் கோவில்:

கர்நாடக மாநிலத்தில் அமைந்துள்ள குக்கே சுப்ரமணியர் கோவில் குழந்தை வரம் தரும் மற்றொரு அற்பு தமான கோவில். குழந்தை இல்லாத தம்பதிகள் இக்கோவிலுக்கு சென்று சர்ப சம்ஸ்கார பூஜை செய்து வழிபட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்க தடையாக இருக்கும் நாக தோஷம் விலகும். இங்குள்ள குமாரதாரா ஆற்றில் நீராடி, குழந்தை இல்லாத தம்பதிகள் இந்த பூஜையை செய்து வழிபட்டால் கண்டிப்பாக குழந்தை பாக்கியம் கிடைக்கும். இது மிகவும் சக்திவாய்ந்த கோவிலாகும்.

3. மீனாட்சி அம்மன் கோவில் :

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சென்று வழிபட்டால் திருமண வரம், குழந்தை வரம் நிச்சயம் கிடைக்கும். பாண்டிய மன்னனுக்கு பல காலமாக குழந்தை இல்லை என்ற குறையை போக்க அன்னை பராசக்தியே மகளாக வந்து அவதரித்த தலம் இது. இங்கு தன்னை தேடி வரும் பக்தர்களுக்கு தாயாக இருந்து அன்னை மீனாட்சி அவர்கள் வேண்டும் வரங்கள் அனைத்தும் அளித்து, குறைகளை போக்கும் தெய்வமாக இருந்து வருகிறாள். அதனால் இங்கு வந்து வேண்டிக் கொண்டால் நிச்சயம் குழந்தை வரம் கிடைக்கும்.

4. சந்தான வேணுகோபால சுவாமி கோவில் :

கர்நாடகாவில் உள்ள 1800 ஆண்டுகள் பழமையான இந்த கோவில் சோழர்கள் காலத்தில் கட்டப்பட்டதாகும். குழந்தை இல்லாத பல தம்பதிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து இங்கு வந்து வழிபட்டு, பலன் பெற்று செல்கிறார்கள். இங்கு வந்து குழந்தை கிருஷ்ணனுக்கு பூஜை செய்து வழிபட்டால் அவர்களுக்கு கண்ணனே குழந்தையாக வந்து பிறப்பார் என்பது நம்பிக்கை. குழந்தை பாக்கியம் தருவதுடன் சர்ப்ப தோஷம் போக்கும் திருத்தலமாகவும் இக்கோவில் விளங்குகிறது.

5. மன்னர்சாலா நடராஜர் கோவில்:

கேரளாவில் உள்ள மன்னர்சாலா நடராஜர் கோவில் நாக தேவதைகள் வழிபாட்டிற்கான கோவிலாகும். குழந்தை இல்லாதவர்கள் இந்த கோவில் உருளி கமழதாள் எனப்படும் சிறப்பு சடங்கு ஒன்றை செய்கிறார்கள். இந்த பூஜை செய்பவர்களுக்கு சிறப்பாக மஞ்சள் கலவை ஒன்றை பிரசாதமாக கொடுக்கிறார்கள். இந்த மஞ்சளை வீட்டில் வைத்து வழிபட்டாலும், தினமும் நெற்றியில் வைத்து வந்தாலும் விரைவில் அவர்களுக்கு குழந்தை பாக்கியம் என்பது நம்பிக்கை. இப்படி வழிபடும் அனைவருக்கும் குழந்தை பாக்கியம் கிடைத்து ள்ளதாக சொல்லப்ப டுகிறது.

## ஆஷஸ் முதல் டெஸ்ட்: கோன்ஸ்டாஸ் டிராப் வெதரால்ட் என்ற புதுமுகம் அறிமுகம்





நவம்பர் 21ம் தேதி பெர்த்தில் தொடங்கும் ஆஷஸ் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்டீவ் ஸ்மித் தலைமையிலான ஆஸ்திரேலிய அணியில் அதிரடி தொடக்க வீரர் சாம் கோன்ஸ்டாஸ் இடம்பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் நீக்கப்பட்டுள்ளார்.

புதுமுக வீரர் ஜேக் வெதரால்ட் 15 வீரர்கள் கொண்ட அணியில் தேர்வு செய்யப்பட்டுள்ளார். 31 வயதாகும் ஜேக் வெதரால்ட் தொடக்க வீரர். தெற்கு ஆஸ்திரேலியா அணிக்கு ஆடுகிறார். பீபிஎல் டி20யில் அடிலெய்ட் ஸ்ட்ரைக்கர்ஸ் அணிக்கு ஆடுகிறார். பாகிஸ்தான் சூப்பர் லீகில் குவெட்டா கிளாடியேட்டர்ஸ் அணிக்கு ஆடினார். 76 முதல் தரப் போட்டிகளில் இவர் 5,269 ரன்களை 13 சதங்கள் 26 அரைசதங்கள் எடுத்துள்ளார். சராசரி 37.63. கடந்த ஷெஃபீல்ட் ஷீல்ட் உள்நாட்டுத் தொடரில் வெதரால்ட் 906 ரன்களை 50.33 என்ற சராசரியில் எடுத்து முன்னணி வீரராகத் திகழ்ந்தார்.

அணியிலிருந்து தூக்கப்படுவார் என்று எதிர்பார்த்த மார்னஸ் லபுஷேன் சமீபத்தில் குவீன்ஸ்லாந்து அணிக்காக 5 சதங்களை விளாசியதையடுத்து மீண்டும் ஆஸ்திரேலிய பேட்டிங் வரிசையில் 3ம் நிலைக்குத் திரும்பியுள்ளார்.

தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி உட்பட லபுஷேன் சொதப்பியதால் மே.இ.தீவுகள் தொடருக்கு ட்ராப் செய்யப்பட்டார். உஸ்மான் கவாஜாவை வேறு வழியின்றி அணியில் தக்கவைத்துள்ளனர். ஏனெனில் இன்னொரு அனுபவ ஓப்பனர் அங்கு இல்லை.

மே.இ.தீவுகள் தொடரில் வாய்ப்பளிக்கப்பட்ட சாம் கோன்ஸ்டாஸ் 3, 5, 25, 0, 17, 0 என்று சொதப்பினார். மேத்யூ ரென்ஷா, மிட்ச் மார்ஷ் இருவரும் தேர்வு செய்யப்படவில்லை. காரணம் ஆல்ரவுண்டர்கள் கேமரூன் கிரீன், பியூ வெப்ஸ்டர் இருவரும் உள்ளனர்.

ஆஸ்திரேலிய அணி வருமாறு: ஸ்டீவ் ஸ்மித் கேப்டன், ஷான் அபாட், ஸ்காட் போலண்ட், அலெக்ஸ் கேரி, பிரெண்டன் டாக்கெட், கேமரூன் கிரீன், ஜாஷ் ஹேசில்வுட், டிராவிஸ் ஹெட், ஜாஷ் இங்லிஷ், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லபுஷேன், நேதன் லயன், மிட்செல் ஸ்டார்க், ஜேக் வெதரால்ட், பியூ வெப்ஸ்டர்.

இங்கிலாந்து அணி: பென் ஸ்டோக்ஸ் (கே), ஹாரி புரூக் (துணைக் கேப்டன்), ஜோஃப்ரா ஆர்ச்சர், கஸ் அட்கின்சன், ஷோயப் பஷீர், ஜேகப் பெத்தேல், பிரைடன் கார்ஸ், ஜாக் கிராலி, பென் டக்கெட், வில் ஜாக்ஸ், ஆலி போப், மேத்யூ பாட்ஸ், ஜோ ரூட், ஜேமி ஸ்மித், ஜாஷ் டங், மார்க் உட்.

## ஐசிசி பேட்டிங் தரவரிசையில் முதலிடம் பிடித்தார் வோல்வார்ட்



மகளிர் ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடர் முடிவடைந்துள்ள நிலையில் பேட்டிங் தரவரிசை பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது. இதில் இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா, தென் ஆப்பிரிக்காவின் லாரா வோல்வார்ட்டிடம் முதலிடத்தை இழந்துள்ளார்.

அரை இறுதி மற்றும் இறுதிப் போட்டியில் சதம் விளாசியிருந்த லாரா வோல்வார்ட், உலகக் கோப்பை தொடரில் 571 ரன்களை வேட்டையாடி இருந்தார். இதன் மூலம் அவர், தரவரிசையில் 814 புள்ளிகளுடன் 2 இடங்கள் முன்னேறி முதலிடத்தை பிடித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான அரை இறுதி ஆட்டத்தில் சதம் விளாசிய இந்திய அணியின் ஜெமிமா ரோட்ரிக்ஸ் 9 இடங்கள் முன்னேறி முதன்முறையாக 10வது இடத்தை பிடித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் ஃபோப் லிட்ச்ஃபீல்ட் 637 புள்ளிகளுடன் 13 இடங்கள் முன்னேறி 13வது இடத்தை அடைந்துள்ளார். அதே அணியை சேர்ந்த எலிஸ் பெர்ரி 669 புள்ளிகளுடன் 7வது இடத்தை நியூஸிலாந்தின் சோபி டிவைனுடன் பகிர்ந்து கொண்டுள்ளார். இந்திய அணியின் கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் 4 இடங்கள் முன்னேறி 634 புள்ளிகளுடன் 14வது இடத்தை பிடித்துள்ளார்.

பந்துவீச்சு தரவரிசையில் தென் ஆப்பிரிக்காவின் மரிசான் காப் 712 புள்ளிகளுடன் 2 இடங்கள் முன்னேறி 2வது இடத்தை பிடித்துள்ளார். அரை இறுதி ஆட்டத்தில் அவர், இங்கிலாந்து அணிக்கு எதிராக 20 ரன்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார். இங்கிலாந்தின் சோஃபி எக்லெஸ்டோன் 747 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்கிறார். இந்தியாவின் தீப்தி சர்மா 657 புள்ளிகளுடன் 5வது இடத்தில் உள்ளார்.



## ரஞ்சி கோப்பை கிரிக்கெட்: விதர்பா தமிழ்நாடு ஆட்டம் டிரா; கர்நாடகா இன்னிங்ஸ் வெற்றி

ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடரில் 'ஏ' பிரிவில் இடம் பெற்றுள்ள தமிழ்நாடு விதர்பா அணிகள் இடையிலான ஆட்டம் கோவையில் நடைபெற்றது. இதன் முதல் இன்னிங்ஸில் தமிழ்நாடு அணி 291 ரன்களும், விதர்பா 501 ரன்களும் குவித்தன. 210 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்ஸை விளையாடிய தமிழ்நாடு அணி நேற்றைய கடைசி நாள் ஆட்டத்தில் 89 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 233 ரன்கள் எடுத்திருந்த போது ஆட்டம் டிராவில் முடித்துக்கொள்ளப்பட்டது.

ஆதிஷ் 46, விமல் குமார் 9, பிரதோஷ் ரஞ்ஜன் பால் 14, ஆந்த்ரே சித்தார்த் 11, ஷாருக் கான் 40, முகமது அலி 25 ரன்களில் ஆட்டமிழந்தனர். பாபா இந்திரஜித் 189 பந்துகளில், 5 பவுண்டரிகளுடன் 77 ரன்களும், கேப்டன் சாய் கிஷோர் 4 ரன்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றதால் விதர்பா அணிக்கு 3 புள்ளிகள் கிடைத்தது. தமிழ்நாடு அணிக்கு ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

இன்னிங்ஸ் வெற்றி: 'பி' பிரிவில் மங்கலாபுரத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் கர்நாடகா அணி இன்னிங்ஸ் மற்றும் 164 ரன்கள் வித்தியாசத்தில் கேரளா அணியை வீழ்த்தியது. இந்த போட்டியின் முதல் இன்னிங்ஸில் கர்நாடகா 5 விக்கெட்கள் இழப்புக்கு 586 ரன்கள் குவித்து டிக்ளேர் செய்திருந்தது. கருண் நாயர் 233 ரன்களும், ரவிச்சந்திரன் சம்ரன் 220 ரன்களும் விளாசியிருந்தனர். கேரளா அணி முதல் இன்னிங்ஸில் 238 ரன்களுக்கு ஆட்டமிழந்து பாலோஆன் பெற்றது. அந்த அணி 2வது இன்னிங்ஸில் 184 ரன்களுக்கு சுருண்டது. ஆட்ட நாயகனாக கருண் நாயர் தேர்வானார்.

ஜெய்ஸ்வால் சதம்: 'டி' பிரிவில் ஜெய்ப்பூரில் நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை ராஜஸ்தான் அணிகள் மோதின. இதன் முதல் இன்னிங்ஸில் மும்பை 254 ரன்களும், ராஜஸ்தான் 617 ரன்களும் எடுத்தன. 363 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்ஸை விளையாடிய மும்பை அணி நேற்றைய கடைசி நாள் ஆட்டத்தில் 82 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 269 ரன்கள் எடுத்திருந்த போது போட்டி டிராவில் முடித்துக்கொள்ளப்பட்டது. தொடக்க வீரரான யஷஸ்வி ஜெய்ஸ்வால் 174 பந்துகளில், ஒரு சிக்ஸர், 18 பவுண்டரிகளுடன் 156 ரன்கள் விளாசினார். முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றதால் ராஜஸ்தான் அணி 3 புள்ளிகளை பெற்றது.



## '3 காதல் தோல்விகள்....இரண்டாவதை மறக்கவே முடியவில்லை' பிரபல நடிகை

நடிகையாக அதிகம் காணப்படவில்லை என்றாலும், தொலைக்காட்சி தொகுப்பாளராக இவர் அதிகம் பிரபலமானார். தெலுங்கு பிக் பாஸின் எட்டாவது சீசனில் இவர் பங்கேற்றிருந்தார். சமீபத்தில் ஒரு நேர்காணலில் கலந்து கொண்ட இவர் தனது காதல் தோல்வி பற்றி சில விஷயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

அவர் யார் தெரியுமா?. வேறு யாறுமில்லை விஷ்ணு பிரியாதான். அவர் பேசுகையில், 'எனக்கு மூன்று காதல் தோல்விகள் உள்ளன. அதில் இரண்டாவது தோல்வியை மறக்க மூன்று வருடங்கள் காசி மற்றும் புனித தலங்களுக்குச் சென்றேன். அதை மறக்க நீண்ட காலம் ஆனது' என்றார்.

விஷ்ணு பிரியா தனது வாழ்க்கையை யூடியூபராகத் தொடங்கினார். ஈடிவியில் போரா போவ் நிகழ்ச்சியின் மூலம் தொகுப்பாளராக மாறினார். தொடர்ந்து பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தொகுப்பாளராக இருந்தார். இவர் கதாநாயகியாக வாண்டடு பாண்டுகோடு என்ற படத்தில் நடித்திருக்கிறார்.

## ராம் அப்துல்லா ஆண்டனி விமர்சனம்

திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த பள்ளி மாணவர்கள் ராம், அப்துல்லா, ஆண்டனி ஆகியோர் நெருங்கிய நண்பர்கள். திடீரென்று அவர்கள் தொழிலதிபர் வேல.ராமமூர்த்தியின் பேரனை கடத்தி கொல்கின்றனர். இந்த கொலையை அராஜக போலீஸ் இன்ஸ்பெக்டர் சாய் தீனாவும், நேர்மையான போலீஸ் கான்ஸ்டபிள் சவுந்தரராஜாவும் விசாரிக்கின்றனர். கொலைக்கான பின்னணி என்ன என்பது மீதி கதை.

ராம் ஆக அஜய் அர்னால்ட், அப்துல்லா ஆக அர்ஜுன், ஆண்டனி ஆக பூவையார் ஆகிய மூவரும் கேரக்டரை உணர்ந்து சிறப்பாக நடித்துள்ளனர். மாணவர்களுக்கு ஆதரவாக வரும் சவுந்தரராஜா, கிளைமாக்ஸ் ட்விஸ்ட்டுக்கு உதவும் முக்கிய கேரக்டரில் சிறப்பாக நடித்துள்ளார். தந்தை வேடத்தில் தலைவாசல் விஜய், ஜாவா சுந்தரேசன், கிச்சா ரவி, தாய் வேடத்தில் வினோதினி வைத்தியநாதன், ரமா, ஹரிதா ஆகியோர் இயல்பாக நடித்துள்ளனர்.

வேல.ராமமூர்த்தி, சாய் தீனா ஆகியோர் வழக்கமான ஸ்டைலில் நடித்துள்ளனர். எல்.கே.விஜய் ஒளிப்பதிவு, டி.ஆர்.கிருஷ்ணசேத்தன் பின்னணி இசை கதையோட்டத்துக்கு வலு சேர்த்துள்ளன. சுரேஷின் ஆக்ஷன் சீன்கள் கவனத்தை ஈர்க்கின்றன. புகையிலை எமன் குறித்த விழிப்புணர்வை வன்முறையுடன் எழுதி இயக்கிய ஜெயவேல், கிளைமாக்சில் பாடம் நடத்தியிருக்கிறார்.






## கார்கில் போர் வெப்தொடரில் சித்தார்த்

இந்தியா, பாகிஸ்தான் இடையே கடந்த 1999ல் கார்கில் போர் மூண்டது. கார்கில், ஜம்மு மற்றும் காஷ்மீரில் இருக்கும் சில பகுதிகளில் பாகிஸ்தான் ராணுவமும், தீவிரவாதிகளும் ஊடுருவ முயன்றனர். அவர்களை இந்திய ராணுவம் விரட்டியடித்து, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியை மீட்டது. அப்போது இந்திய விமானப்படை மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு 'ஆபரேஷன் சஃபேத் சாகர்' என்று பெயரிடப்பட்டது. பாகிஸ்தான் ராணுவம் மற்றும் தீவிரவாத முகாம்கள், ஆயுதங்கள் மற்றும் விநியோக வழித்தடங்களை அழிப்பதில் பெரும் பங்காற்றியது.

இந்நிலையில், அந்த விமானப்படையின் பணியை 'ஆபரேஷன் சஃபேத் சாகர்' என்ற பெயரில் வெப்தொடராக உருவாக்கியுள்ளனர். அடுத்த ஆண்டு நெட்பிளிக்ஸில் வெளியாகும் இதில் விமானப்படை வீரராக சித்தார்த், ஜிம்மி ஷெர்கில், அபய் வர்மா, மிஹிர் அஹுஜா, தாருக் ரெய்னா, அர்னவ் பாசின் நடித்துள்ளனர். ஓனி சென் இயக்கியுள்ளார். மேட்ச் பாக்ஸ் ஷாட்ஸ், ஃபீல்குட் பிலிம்ஸ் தயாரித்துள்ள இந்த வெப்தொடர், இந்திய விமானப்படையின் ஆதரவுடன் உருவாகியுள்ளது. கார்கில் போரின் அறியப்படாத பக்கங்களை இத்தொடர் பேசும். டெல்லியில் நடந்த செகோன் இந்திய விமானப்படை மாரத்தான் 2025ன் தொடக்க விழாவில் வெப்தொடரின் டீசர் வெளியிடப்பட்டது.



## தாம்பரம் பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கு இடையூறாக இருந்த கடைகள் அகற்றும் மாநகராட்சி நடவடிக்கை

தாம்பரம், நவ.07-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் சென்னை புறநகர் பகுதிகளில் முக்கிய பகுதியான தாம்பரம் பகுதியில் ஜிஎஸ்டி சாலையை ஒட்டி பேருந்து நிலையம் அமைந்துள்ளது இந்த பேருந்து நிலையங்களை அன்றாடம் லட்சக்கணக்கான மக்கள் பயன்படுத்தி வருகின்றனர் இப்படி முக்கியத்துவம் வாய்ந்த பேருந்து நிலையத்தில் இருந்து சாலையோர கடைகள் மற்றும் வணிக வளாகங்களில் நடைபாதைகள் ஆக்ரமிக்க ப்பட்டுள்ளது இதனால் பொதுமக்கள் நடைபாதைகளை பயன்படுத்த முடியாமல் பேருந்து செல்லும் வழித்தடங்களில் நடந்து செல்வதால் போக்குவரஇடையூறாக இருந்து வந்தது இந்நிலையில் பயணிகளுக்கு இடையூறாக உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற தாம்பரம் மாநகராட்சி ஆணையர் பாலச்சந்தர் அவர்களின் உத்தரவின் பேரில் நகர அமைப்பு அலுவலர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் இணைந்து பேருந்து நிலையத்தில் இருந்த சுமார் 60க்கும் மேற்பட்ட கடைகளால் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை ஜேசிபி இயந்திரங்களைக் கொண்டு அகற்றினர் மேலும் பேருந்து நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த விளம்பர பலகைகளையும் அகற்றினார் ஆக்கிரமிப்புகளை அகற்றிய போது ஏராளமான போலீசாரும் குவிக்கப்பட்டு இருந்ததால் பரபரப்பு ஏற்பட்டது

## ஊரப்பாக்கத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் கழக செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்: அமைச்சர் தா.மோ. அன்பரசன் பங்கேற்பு

ஊரப்பாக்கம், நவ.07-

செங்கல்பட்டு மாவட்டம் ஊரப்ப ாக்கத்தில் காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட 11 ஊராட்சிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் நடைபெற்றன. செங்கல்பட்டு மாவட்டம் ஊரப்பாக்கம் ஊராட்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற




செயல்வீரர்கள் மற்றும் பாக நிலை முகவர்கள், பாக டிஜிட்டல் முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் ஊரப்பாக்கத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமை தாங்கி கூட்டத்தை தொடங்கி வைத்து செயல் வீரர்கள் மற்றும் பாக நிலை முகவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். இதில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செங்கல்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், காட்டாங்கொளத்தூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் உதயா கருணாகரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். நடைபெற்ற இக்கூட்டம் காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.டி.லோகநாதன் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்றது. கூட்டத்தில் ஒன்றிய கவுன்சிலர்கள் சோமசுந்தரம், நேதாஜி, மோகனா கண்ணன், மண்ணிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் கெஜலட்சுமி சண்முகம், துணைத் தலைவர் சுமதி லோகநாதன், ஊரப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் பவானி கார்த்திக், துணைத் தலைவர் ரேகா கார்த்தி, காரணைபுதுச்சேரி ஊராட்சி மன்ற தலைவர் நளினிஜெகன் துணைத் தலைவர் வினோதினி ஞானசேகரன், கீரப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் செல்வ சுந்தரி ராஜேந்திரன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ஜான்தினகரன், காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.எஸ். கார்த்திக், மற்றும் ஒன்றியம் கழக நிர்வாகிகள் கழக அணிகளின் நிர்வாகிகள் கிளைக்கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலை மற்றும் பூத் டிஜிட்டல் முகவர்கள் உட்பட கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## "தவெக தலைவர் விஜய் பலவீனமானவர்" பேரவைத் தலைவர் அப்பாவு கருத்து

நெல்லை, நவ.07-

"தவெக தலைவர் விஜய் பலவீனமானவர். கரூர் விவகாரத்தில் தமிழக முதல்வர் பெருந்தன்மையாக நடந்து கொண்டார்" என்று தமிழக சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு கூறினார்.





திருநெல்வேலி உடையார்பட்டி தாமிரபரணி ஆற்றங்கரையில், சமூக நல்லிணக்க பேரவை, தமிழ்நாடு அய்க்கஃப், துறவியர் பேரவை மற்றும் தோழமை கல்வி நிறுவனங்கள் இணைந்து மாநில அளவிலான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு சைக்கிள் பேரணி, மரக்கன்று மற்றும் பனை விதை நடும் விழாவை நடத்தின.

இதில் தமிழக சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, திருநெல்வேலி மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுடன் இணைந்து பனை விதைகளை தாமிரபரணி கரைகளில் நட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர்.

தொடர்ந்து சமூக ஆர்வலர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் இணைந்து தாமிரபரணி ஆற்றங்கரை பகுதிகளில் 500க்கும் மேற்பட்ட பனை விதைகளை நடவு செய்தனர். மேலும் பசுமை, சுற்றுச்சூழல் ஆகியவை தொடர்பாக பறை அடித்து, பதாதகை ஏந்தி விழிப்புணர்வு பேரணி நடத்தினர்.

நிகழ்ச்சிக்குப் பின் செய்தியாளர்களிடம் சட்டப் பேரவை அப்பாவு தலைவர் கூறியது: "தவெக தலைவர் விஜய் பலவீனமானவர். ஒரு பிரச்சினை என்றவுடன் அவரும் அவருடன் உள்ளவர்களும் ஓடி ஒளிந்து கொண்டார்கள். ஆனால், கரூர் விவகாரத்தில் தமிழக முதல்வர் பெருந்தன்மையாக நடந்து கொண்டார். அவரை சிறுமைப்படுத்த நினைப்பவர்கள் சிறுமைப்பட்டு போவார்கள்.

தமிழக முதல்வரிடம் குறுகிய எண்ணம் கிடையாது. தண்டிக்க வேண்டும் என்ற உணர்வு இருந்திருந்தால், விஜய்யை அன்றே கைது செய்து சிறையில் அடைத்திருப்பார். 41 பேர் உயிரிழந்தவுடன் துண்டை காணோம், துணியை காணோம் என்று ஓடி ஒளிந்தவர்கள், தற்போது நானும் ரவுடி தான் என நடிகர் வடிவேல் சொன்னது போல் சொல்லி வருகிறார்கள்.

பலவீனமானவர்கள் தன்னை வீரன் என காட்டிக் கொள்ள எதையாவது சொல்லிக் கொள்வார்கள். நடிகர்கள் கட்சி ஆரம்பித்து என்ன ஆனார்கள் என்ற வரலாறு உள்ளது. இப்போது கட்சி ஆரம்பித்த நடிகரும் அந்த வரலாற்றில் இடம் பெறுவார். வரும் சட்டப் பேரவை தேர்தலிலும் வெற்றி பெற்று ஸ்டாலின் மீண்டும் முதல்வராவார். சிறப்பு வாக்காளர் தீவிர திருத்த பணிகளில் யாருக்கும் பயமில்லை" என்று அவர் கூறினார்.



## பிஹார் துணை முதல்வர் கார் மீது செருப்பு, கற்கள் வீச்சு நடவடிக்கை எடுக்க டிஜிபிக்கு தேர்தல் ஆணையர் உத்தரவு

புதுடெல்லி, நவ.07-

பிஹாரின் லக்கிசராய் தொகுதி பாஜக வேட்பாளரும் துணை முதல்வருமான விஜய் குமார் சின்ஹாவின் கார் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க டிஜிபிக்கு இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் உத்தரவிட்டுள்ளார்.

லக்கிசராய் தொகுதி பாஜக வேட்பாளரும் துணை முதல்வருமான விஜய் குமார் சின்ஹா, தனது தொகுதிக்கு உட்பட்ட கோரியாரி என்ற கிராமத்திற்குச் சென்றபோது அந்த கிராமத்தைச் சேர்ந்த ராஷ்ட்ரிய ஜனதா தள தொண்டர்கள் அவரது கார் மீது செருப்பு, கற்களை வீசி தாக்கினர். மேலும், மாட்டு சாணத்தை வீசியதாகவும் கூறப்படுகிறது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய விஜய் குமார் சின்ஹா, "இந்த தாக்குதலில் ஈடுபட்டவர்கள் ராஷ்ட்ரிய ஜனதா தள குண்டர்கள். அவர்கள் என்னை கிராமத்துக்குள் செல்ல விடவில்லை. அவர்கள் எனது வாக்குச்சாவடி முகவரை திருப்பி அனுப்பி உள்ளனர். கோரியாரி கிராமத்தின் பூத் எண்கள் 404 மற்றும் 405. நான் சென்றபோது எனக்கு எதிராக ஒழிக கோஷங்களை எழுப்பினர்" என தெரிவித்தார்.

பொதுவாக அமைதியாக நடந்த சட்டப்பேரவை முதற்கட்டத் தேர்தலில் இந்த சம்பவம் ஒரு கரும்புள்ளியாக அமைந்துவிட்டது. இந்த சம்பவத்தை அடுத்து, வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்குமாறு மாநில காவல்துறை தலைவருக்கு இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் உத்தரவிட்டுள்ளார். சட்டத்தை யாரும் தங்கள் கைகளில் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள் என தெரிவித்துள்ள ஞானேஷ்குமார், அனைத்து வாக்காளர்களும் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் எவ்வித அச்சமும் இன்றி பாதுகாப்பாக வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார்.



## கோவை மாவட்டம் தமிழக வெற்றி கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம்

கோவை, நவ.07-


கோவை விமான நிலையம் பின்புறம் உள்ள காலி இடத்தில் கல்லூரி மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதை கண்டித்து தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தவெக மாவட்ட செயலாளர்கள் சம்பத்,ராஜ்குமார்,விக்னேஷ்,யுவராஜ், பாபு ஆகியோர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 500க்கும் மேற்பட்ட தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன பதாகைகளை கையில் ஏந்தி கோசங்கள் முழங்க ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இதில் கோவை புறநகர் வடக்கு மாவட்டம் தொண்டாமுத்தூர் தொகுதி குனியமுத்தூர் பகுதி கிழக்கு தலைமை சார்பாக 88வது வார்டு மற்றும் 93வது வார்டு சார்பாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர் குனியமுத்தூர் பகுதி கிழக்கு தலைமை நிர்வாகிகள் பகுதி கழகச் செயலாளர் ஜி.ஆர் செந்தில், இணைச் செயலாளர் ராமலிங்கம், பொருளாளர் விஜயகுமார், துணைச் செயலாளர் சந்திரசேகர், பகுதி நிர்வாகிகள் கமலக்கண்ணன், ராபர்ட், ரகுமான் ஜோதி,93 வது வார்டு செயலாளர் பிரவீன் மற்றும் நிர்வாகிகள், மகளிர் அணி அமைப்பாளர் லீலா செந்தில் மற்றும் நிர்வாகிகள் தொண்டரணி அமைப்பாளர் சுரேஷ் மற்றும் நிர்வாகிகள் கலந்து உட்பட பலர் கலந்து கொண்டனர்

## "தமிழக அரசின் முடிவே அவலங்களுக்கு காரணம்" தூய்மைப் பணி பிரச்சினையில் சு.வெங்கடேசன் எம்.பி சாடல்

மதுரை, நவ.07-

"தூய்மைப் பணியை தனியாருக்கு கொடுக்கக் கூடிய தமிழக அரசின் முடிவே அனைத்து அவலங்களுக்கும் அடிப்படை காரணம்" என்று சு.வெங்கடேசன் எம்.பி தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்ட வீடியோவில், "தூய்மைப் பணியை தனியாருக்கு கொடுக்க கூடிய தமிழக அரசின் முடிவு, அனைத்து அவலங்களுக்கும் அடிப்படை காரணம். தனியாருக்கு கொடுக்கும் முடிவை கைவிட வேண்டும். நகரங்களின் தூய்மையையும், வசிக்கும் மக்களின் சுகாதாரத்தையும் பாழாக்கும். கூடுதலான பிரச்சினை என்றால், மதுரை மாநகராட்சியில் தூய்மைப் பணி ஒரு தனியார் நிறுவனத்திற்கு டெண்டர் கொடுக்கப்படுகிறது.

அந்த ஒப்பந்தத்தை சென்னை தலைமை செயலகத்தில் உள்ள நகராட்சி நிர்வாகத் துறை தீர்மானிக்கிறது. மாநகராட்சி நிர்வாகம் அல்ல. இயல்பாக ஒரு பிரச்சினை என்ன வருகிறது என்றால், இந்த ஒப்பந்தத்தை எடுக்கக் கூடிய எந்த நிறுவனமும், அந்த மாநகராட்சிகளின் அதிகாரிகளுக்கும் கட்டுப்படுவதில்லை. அவர்கள் குரலுக்கும் செவி சாய்ப்பதில்லை. தன்னிச்சையாக செயல்படுகிறது. இந்த அவலம் தீர்க்கப்பட வேண்டும். இதற்கு அடிப்படை காரணமான தூய்மைப் பணியை தனியாருக்கு கொடுக்கும் அரசின் அடிப்படை கொள்கை முடிவை கைவிட வேண்டும்.

மதுரை மாநகராட்சியை பற்றி கடந்த 4 நாட்களாக ஊடகங்களில் வந்து கொண்டிருக்கிற செய்திகளும், ஒட்டப்பட்டுள்ள போஸ்டரும் மிகவும் வேதனையானது. அசுத்தமான நகரங்களின் பட்டியலில் மதுரை முதலாவது இடம் என்ற செய்தியை வெளியிட்டது யார்? எந்த நிறுவனம், அமைப்பு வெளியிட்டது என சோதிக்காமல், உண்மைத் தன்மையை ஆராயாமல் நாம் பெரிதும் மதிக்கக்கூடிய சில அச்சு ஊடகங்கள் கூட வெளியிட்டுள்ளது.

கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை 20 லட்சம் மக்கள் தொகைக்கு மேல் வசிக்கும் தூய்மை நகரங்களின் பட்டியலை வெளியிட்டது. அதில், 40 வது இடத்தில் மதுரை இடம் பிடித்திருந்தது. இந்த பட்டியலில் முதலிடம் பெற்ற மாநகராட்சிக்கு குடியரசு தலைவர் விருது வழங்கினார். அதனை முன்னிட்டு தான் அந்தப் பட்டியல் வெளியிடப்பட்டது. அதனையொட்டி நான் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தேன். அந்தப் பட்டியல் வெளியிடப்பட்ட குறியீடுகளில் பிரச்சினை இருக்கிறது. ஆனால், 40 இடம் என்பதை ஏற்றுக் கொள்ளவே முடியாதது.

மதுரை மாநகரத்தின் தூய்மையை கடைபிடிக்க வேண்டும் எனக் கூறியிருந்தேன். இந்த அறிக்கைக்காக, மாமன்றக் கூட்டத்தில் கூட திமுக உறுப்பினர்களே எனக்கு எதிராக பேசினார்கள். இது நடந்து முடிந்து 4 மாதங்கள் ஆகிவிட்டது. தற்போது, அந்த 40 நகரங்கள் பட்டியலில் கடைசி 10 நகரங்களை எடுத்து அசுத்தமான நகரங்களின் பட்டியலில் மதுரை முதலிடம் என்ற ஒரு செய்தியை பாஜகவைச் சேர்ந்தவர்கள் பரப்பியுள்ளனர். எப்படி நகரின் குப்பைகள் அகற்றப்பட வேண்டுமோ? அதுபோல, பொய்களை பரப்புகிற குப்பைகளும் அகற்றப்பட வேண்டும்" என்று சு.வெங்கடேசன் கூறியுள்ளார்.

## பிஹார் முதற்கட்ட தேர்தல்: மாலை 5 மணி வரை 60.13% வாக்குகள் பதிவு

பாட்னா, நவ.07-

பிஹார் சட்டப்பேரவைக்கான முதற்கட்டத் தேர்தலில் மாலை 5 மணி வரை 60.13% வாக்குகள் பதிவாகி உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.



பிஹார் சட்டப்பேரவை தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு 18 மாவட்டங்களில் இன்று காலை 7 மணிக்கு தொடங்கியது. மாலை 5 மணி வரை 60.13% வாக்குகள் பதிவாகி உள்ளன. தேர்தல் நடைபெற்ற 18 மாவட்டங்களில் அதிகபட்சமாக பெகுசராய் மாவட்டத்தில் 67.32% வாக்குகள் பதிவாகி உள்ளன. தலைநகர் பாட்னாவில் 55.02% வாக்குகள் பதிவாகி உள்ளன.

கோபால்கஞ்ச் மாவட்டத்தில் 64.96% வாக்குகளும், முசாஃபர்பூர் மாவட்டத்தில் 64.63% வாக்குகளும் பதிவாகி உள்ளன. லக்கிசராய் மாவட்டத்தில் 62.76% வாக்குகளும், மதேபுரா மாவட்டத்தில் 65.74% வாக்குகளும் பதிவாகி உள்ளன. போஜ்பூர் மாவட்டத்தில் 53.24%, பக்ஸர் மாவட்டத்தில் 55.10%, தர்பங்காவில் 58.38%, காகாரியாவில் 60.65%, முங்கெரில் 54.90%, நாளந்தாவில் 57.58%, சஹார்சாவில் 62.65%, சமஸ்திபூரில் 66.65%, சரணில் 60.90%, ஷேக்புராவில் 52.36%, சிவானில் 57.41%, வைஷாலியில் 59.45% வாக்குகள் பதிவாகி உள்ளன.

விவிஐபிக்கள் போட்டியிடும் தொகுதிகளான ரகோபூரில் 64.01%, மஹுவாவில் 54.88%, அலிநகரில் 58.05%, தாராபூரில் 58.33%, லக்கிசராயில் 60.51%, சாப்ராவில் 56.32%, பன்கிபூரில் 40%, புல்வாரியில் 62.14%, ரகுநாத்பூரில் 51.18%, சிவணில் 57.38%, மொகாமாவில் 62.16% வாக்குகள் பதிவாகி உள்ளன.

முதற்கட்ட தேர்தலில் எதிர்க்கட்சிகளின் மகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளரான தேஜஸ்வி யாதவ் மற்றும் மாநில துணை முதல்வர்கள் சாம்ராட் சவுத்ரி மற்றும் விஜய் குமார் சின்ஹா, 10க்கும் மேற்பட்ட பாஜக மற்றும் ஜேடியு அமைச்சர்கள் களத்தில் இருந்தனர். இளம் நாட்டுப்புற பாடகி மைதிலி தாக்கூர் (பாஜக அலிகஞ்ச் தொகுதி) மற்றும் போஜ்புரி சூப்பர் ஸ்டார்கள் கேசரி லால் யாதவ் (ஆர்ஜேடி சாப்ரா தொகுதி) மற்றும் ரித்தேஷ் பாண்டே (ஜன் சுராஜ் கட்சி கர்கஹார் தொகுதி) ஆகியோரும் முதல் கட்ட தேர்தலில் போட்டியிட்டார்கள்.

பிஹார் சட்டப்பேரவையில் மொத்தம் உள்ள 243ல் 121 தொகுதிகளில் இன்று முதல்கட்ட தேர்தல் நடைபெற்றது. இதற்காக பிரதமர் மோடி, ஆர்ஜேடி தலைவர் தேஜஸ்வி, காங்கிரஸின் ராகுல் உள்ளிட்ட தலைவர்கள் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டனர். தேர்தல் பிரச்சாரம் நேற்று முன்தினம் ஓய்ந்தது. 18 மாவட்டங்களை உள்ளடக்கிய இந்த தொகுதிகளில் மொத்தம் 122 பெண்கள் உள்ளிட்ட 1,314 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். வாக்காளர்கள் எண்ணிக்கை 3.75 கோடி. மொத்தம் 45,341 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

கடந்த 2020 தேர்தலில், 121 ல் மகா கூட்டணி 61 தொகுதிகளிலும், தேசிய ஜனநாயக கூட்டணி (என்டிஏ) 59 மற்றும் லோக் ஜன சக்தி ஒரு தொகுதியில் வெற்றி பெற்றிருந்தது. இந்த 121 தொகுதிகளில் மெகா கூட்டணியின் தலைமைக் கட்சியான ராஷ்டிரிய ஜனதா தளம் (ஆர்ஜேடி) மட்டும் 42 தொகுதிகளில் வென்றிருந்தது. இக்கூட்டணியின் இதர உறுப்பினர்களான காங்கிரஸ் 8 மற்றும் இடதுசாரிகள் 11 தொகுதிகளைப் பெற்றன. அதேபோல், பாஜக 32 மற்றும் ஜேடியு 23 தொகுதிகளில் 2020 தேர்தலில் வெற்றி பெற்றன என்பது நினைவுகூரத்தக்கது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161